க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
கணக்கீடு I
நேரம் : 2 மணித்தியாலம்

- **01 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. பங்குதாரர்களுக்கான பகிர்ந்தளிப்பு தொடர்பில் 2007ம் ஆண்டின் 7ம் இலக்கக் கம்பனிச் சட்டப்படி பின்வருவனவற்றுள் சரியான கூற்றுக்கள்.

    a) பங்கு இலாப கொடுப்பனவு   b) இயக்குனர் கட்டணம் செலுத்துதல்
    c) பங்குகளைக் கொள்வனவு செய்தல்   d) பங்குகளை மீட்டல்
    e) ஒப்புறுதி பணிசை வழங்கல்

    1. a, b, c   2. a, c, d   3. b, c, d
    4. b, c, e   5. a, d, e

- வரையறுக்கப்பட்ட அல்பா பொதுக்கம்பனியின் 31.03.2013 இல் உள்ளவாறான தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூ. 600,000 பொதுஒதுக்கம் ரூபா 80,000 மீள் மதிப்பிட்டு ஒதுக்கம் ரூபா 60,000 கூறப்பட்ட முன்னுரிமைப் பங்கு மூலதனம் ரூபா 100,000 நிறுத்தி வைத்த இலாபம் ரூபா 60,000, 12% தொகுதிக்கடன் ரூபா 150,000 நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 70,000 ஆக இருந்தன.
- மேலே உள்ள தகவல்களின் படி 2ம், 3ம் வினாக்களுக்கு விடை தருக.

02. 31.03.2013 இல் கம்பனியில் உரிமை மூலதனத்தின் பெறுமதி
    1. ரூபா 500,000   2. 400,000   3. ரூபா 300,000
    4. ரூபா 600,000   5. 360,000

03. 31.03.2013 இல் மொத்த சொத்துக்களின் பெறுமதி
    1. ரூபா 920,000   2. ரூபா 1120,000   3. ரூபா 820,000
    4. ரூபா 1020,000   5. ரூபா 600,000

- **4ம் 5ம் வினாக்களுக்கு விடை கொடுப்பதற்கு கீழே தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துக.**

சண்வூட் கம்பனியின் ஐந்தொகை திகதி 2013.03.31 ஆகும். நிதிக்கூற்று வெளியீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதி 2013.08.05 ஆகும்.

(a) 2011 / 2012 கணக்காண்டிற்கான வருமானவரி ஏற்பாடு ரூபா 45,000 இல் ரூபா 40,000 2013.05.01 இல் கொடுப்பனவு செய்யப்படுதல்.
(b) 31.03.2013 இல் இருந்த இருப்புக்கள் 18.04.2013 இல் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக ரூபா 20,000 கிரயமான இருப்புக்கள் முற்றாக அழிவடைந்தன.
(c) 19.04.2013 இல் புதிய மோட்டார் வாகனம் ரூபா 400,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்படுதல்
(d) 31.03.2013 இல் உள்ள கடன்பட்டோர் நிலுவையில் ரூபா 100,000 அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்க ஐந்தொகைத் திகதிக்கு பின்னர் தீர்மானித்தல்.
(e) 2013.04.02 இல் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவரினால் தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் 2013.08.01 இல் ரூபா 50,000 இனை நட்ட ஈடாக செலுத்துமாறு நீதிமன்றம் கம்பனிக்கு உத்தரவிடுதல்.

04. கணக்கீட்டு நியமம் 10 இற்கமைய நிதிக்கூற்றுக்காலப்பகுதிக்கு பின்னரான நிகழ்வுகளுக்குள் சரியானவை.
    1. a, b, c   2. a, b, c, d   3. b, c, d
    4. b, c, d, e   5. a, b, c, d, e எல்லாம்

05. கணக்கீட்டு நியமம் 10 இற்கமைய சீராக்கப்படவேண்டிய நிகழ்வுகளுக்குள் சரியானவை.
    1. a, c   2. b, c   3. a, e   4. b மட்டும்   5. d, மட்டும்

- 6ம் 7ம் வினாக்களுக்கு கீழ் உள்ள தகவல்களைப் பயன்படுத்துக.

31.03.2013 வரையறுக்கப்பட்ட XL கம்பனி ஒவ்வொன்றும் 30 ரூபா ஆன 100,000 சாதாரண பங்குகளையும் ஒவ்வொன்றும் ரூபா 20 ஆன 25,000 திரளும் முன்னுரிமைப் பங்குகளையும் கூறப்பட்ட மூலதனமாக கொண்டுள்ளது. முன்னுரிமைப் பங்குகளுக்கு ஆண்டுக்கு ஒரு பங்குக்கு ரூபா 1 பங்கு இலாபம் வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக திரளும் முன்னுரிமைப் பங்குகளுக்கு

பங்கு இலாபம் வழங்கப்படவில்லை. 31.03.2013 இல் உழைக்கப்பட்ட வரிகழித்த பின் இலாபம் 460,000 ஆகும்.

31.03.2013 இல் முடிவடைந்த நிதியாண்டில் கம்பனி 20,000 சாதாரண பங்குகளை ரூபா 50 படி வழங்கப்பட்டது. இயக்குனர்கள் சாதாரண பங்கு ஒன்றுக்கு ரூ. 2 இறுதி பங்கு இலாபத்தை பிரேரித்ததுடன் முன்னுரிமைப் பங்கு நிலுவைப் பங்குகளுக்கும் இலாபம் வழங்க தீர்மானித்தனர்.

06. 31.03.2013 இல் கூறப்பட்ட மூலதனத்தின் பெறுமதி
   1. ரூபா 3 600,000   2. ரூபா 4000,000   3. ரூபா 1, 350,000
   4. ரூபா 4,500,000   5. ரூபா 3550,000

07. 2013.03.31 இல் உள்ளபடி வரிகழித்த பின் இலாபத்தில் இருந்து பங்கு இலாபமாக கழிக்கப் பட்ட மொத்த பெறுமதி .
   1. ரூபா 435,000   2. ரூபா 385,000   3. ரூபா 75,000
   4. ரூபா 295,000   5. ரூபா 25,000

- **கீழே தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 8ம், 9ம் வினாக்களுக்கு விடை தருக.**

வரையறுக்கப்பட்ட கல்கி நிறுவனத்தில் 31.03.2013 இல் காசுப்பாய்ச்சல் கூற்றில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்கள்

வரிவட்டி தவிர்ந்த தொழிற்பாடு மூலதன அதிகரிப்பு	ரூபா. 19,000
நிதியீட்ட நடவடிக்கை மூலதன தேறிய காசு அதிகரிப்பு	ரூபா 60,000
முதலீட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசு அதிகரிப்பு	ரூபா 50,000

மேலதிக தகவல்கள்
1. 31.03.2013 இல் வருமானக் கூற்றில் உள்ளடங்கிய வட்டியும் வருமானவரியும் முறையே ரூ.18,000, ரூ. 24,000 ஆகும்.
2. 01.04.2012, 31.03.2013 இல் மீதிகள்

	01.04.2012	31.03.2013
வருமானவரி ஏற்பாடு	ரூ. 12,000	ரூ. 16,000
சென்மதி வட்டி	ரூ. 6,000	ரூ. 9,000
காசு வங்கி	ரூ. 14,000	ரூ. 30,000

08. 31.03.2013 இல் காசும் காசுக்கு சமமானவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பும் பெறுமதியும், நடவடிக்கையால் ஏற்பட்ட தேறிய காசு முறையே
   1. ரூபா 14,000 ரூபா 6,000   2. ரூபா 14,000 ரூபா 25,000
   3. ரூபா 16,000 ரூபா 10,000   4. ரூபா 16,000 ரூபா 6,000
   5. ரூபா 16,000 ரூபா 25,000

09. 31.03.2013 இல் தொழிற்பாடு மூலதன மாற்றத்திற்கு முன்னர் கணிப்பிடக்கூடிய இலாபம் அல்லது (நட்டம்)
   1. ரூபா 41,000   2. ரூபா 40,000   3. ரூபா 67,000
   4. ரூபா 79,000   5. ரூபா 85,000

- **10ம் 11ம் வினாக்களுக்கு கீழே உள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

31.12.2012ம் திகதியன்று உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் தொழிற்சாலையொன்றில் எடுக்கப்பட்ட விபரங்கள்.

இத்தொழிற்சாலையின் களஞ்சியத்தில் மூலப்பொருட்களுக்கான விலையிடல் FIFO முறை பின்பற்றப்படுகின்றது. 31.12.2012 இல் இறுதியாக கொள்வனவு செய்யப்பட்ட அலகு ஒன்று 15 ரூபா விலையில் 1,400 அலகுகள் இருப்பில் உள்ளன. மற்றும் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட பயன்படுத்தப்படாத 100 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 14 ஆகவும் இருந்தன. 31.12.2012 இல் தொழிற்சாலையில் பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் ரூபா 67ஈ600 உம் அலகு ஒன்றுக்கான உற்பத்திக் கிரயம் ரூ. 120 ஆகவும் உற்பத்தி செய்த அலகுகள் 1,000 ஆகவும் காணப்பட்டது.

10. களஞ்சியத்தில் விநியோகிக்கப்பட்ட விலையிடப்பட்ட அலகுக்குரிய மொத்த பெறுமதி யாது?
   1. ரூபா 67,600   2. ரூபா 68,200   3. ரூபா 120,000
   4. ரூபா 61,000   5. ரூபா 69,000

11. 2012.12.31 இல் நிறுவனத்தின் மூலப்பொருள் இறுதி இருப்பின் பெறுமதி யாது?
   1. ரூபா 70,600   2. ரூபா 64,600   3. ரூபா 22,400
   4. ரூபா 1400   5. ரூபா 21,000

- கணக்கீட்டு விகிதங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
  A. இருப்பு புரள்வு வீதம்
  B. மொத்த சொத்து மீதான வருவாய் விகிதம்
  C. கடன்பட்டோர் புரள்வு விகிதம்
  D. உரிமை முதல் மீதான உழைப்பு விகிதம்
  E. மொத்த சொத்து புரள்வு விகிதம்

12. மேற்கூறிய விகிதங்களில் திரவத்தன்மையினை காட்டும் விகிதங்களானவை.
    1. A, B, C 2. B, D, E 3. A, C 4. B, C, E 5. C, D, E

13. கீழ் தரப்பட்டுள்ள ஒவ்வோர் சந்தர்ப்பத்திலும் மிகவும் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு முறையே.
    A. வருமானம் உழைக்கப்படும் போது அது கம்பனியின் வருமானக் கூற்றில் இனங்காணப்படல்.
    B. கம்பனியின் நிதிக் கூற்றுகளில் பணவீக்கத்திற்கான சீராக்கம் செய்யப்படுவதில்லை.
    C. ஏற்படைய சாத்தியமான உத்தரவாத கோரிக்கை தொடர்பில் கம்பனி ஒன்றின் நிதிக்கூற்றுகளில் ஏற்பாடு ஒன்று செய்யப்படும்.
    D. நிதிக்குத்தகையில் பெறப்பட்ட ஆதனம் ஒன்றை சொத்தாகவும் அதன் கடப்பாட்டினை பொறுப்பாகவும் இனங்காணல்.

	A	B	C	D
1.	தேறல் எண்ணக்கரு	பணஅளவீட்டு எண்ணக்கரு	பாதுகாப்பு எண்ணக்கரு	சட்டமுரண் எண்ணக்கரு
2.	தேறல் எண்ணக்கரு	வரலாற்றுக்கிரய எண்ணக்கரு	அட்டுறுஎண்ணக்கரு	சட்டமுரண் எண்ணக்கரு
3.	அட்டுறு எண்ணக்கரு	பணஅளவீட்டு எண்ணக்கரு	இணைத்தல் எண்ணக்கரு	சட்டமுரண் எண்ணக்கரு
4.	தேறல் எண்ணக்கரு	வரலாற்றுக்கிரய எண்ணக்கரு	பாதுகாப்பு எண்ணக்கரு	சட்டமுரண் எண்ணக்கரு
5.	தேறல் எண்ணக்கரு	பணஅளவீட்டு எண்ணக்கரு	பாதுகாப்பு எண்ணக்கரு	சட்டமுரண்எண்ணக்கரு

14. 2012.06.01 இல் கம்பனி ஒன்றின் ஆரம்பச்சரக்கிருப்பாக ரூ. 10,000 (ஒவ்வொன்றும் ரூ.25 படி 400 அலகுகள்) இருந்தது. இக்கம்பனி வழங்கப்படும் சரக்குகளுக்கு விலையிடுவதற்கு ''நிறையளித்தசராசரி'' விலையிடல் முறையினைப் பயன்படுத்துகிறது. 2012 யூன் மாதத்தில் பின்வரும் பெறுவனவுகளும் வழங்கல்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது.
    யூன் 05 பெறப்பட்டது 400 ஒவ்வொன்றும் ரூ. 24 படி யூன் 12 பெறப்பட்டது 200 ஒவ்வொன்றும் ரூ. 29 படி யூன் 30 வழங்கப்பட்டது 800
    2012 யூன் மாதத்திற்கான விற்பனைக் கிரயம் 2012 யூன் 30 இல் உள்ளவாறான சரக்கின் பெறுமதி
    1. ரூ. 19,900, ரூ. 5,700 2. ரூ. 20,000, ரூ. 5,800 3. ரூ. 20,420 ரூ5,080
    4. ரூ. 20,000, ரூ. 5400 5. ரூ. 20, 360 ரூ. 5,040

- 15ம் 16ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வருவனவற்றைப் பயன்படுத்துக. வரையறுக்கப்பட்ட MS நிறுவனத்தில் 31.03.2012 இல் வங்கி மேலதிக பற்று ரூபா 12,000 காணப்பட்டது. 31.03.2013 இல் நிதிக்கூற்றுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.
  இருப்புகள் ரூ. 36,000 கடன்பட்டோர் ரூ. 24,000 வரி ஏற்பாடு ரூ. 18,000
  கடன்கொடுத்தோர் ரூ. 20,000 முற்பணசெலவு ரூ. 6,000 சென்மதி வட்டி ரூ. 12,000
  நிதியீட்ட செயற்பாட்டில் தேறிய காசு அதிகரிப்பு ரூபா 42,000
  முதலீட்டு செயற்பாட்டில் தேறிய காசு குறைவு ரூபா 24,000
  காசுக்கு சமமானவற்றில் அதிகரிப்பு ரூபா 38,000

15. 2013.03.31 இல் திரவ சொத்துக்களின் பெறுமதி 2013.03.31 இல் தொழிற்படு மூலதன பெறுமதி.
    1. ரூபா 62,000 ரூபா 16,000 2. ரூபா 50,000 ரூபா 42,000 3. ரூபா 24,000 ரூபா 24,000
    4. ரூபா 68,000 ரூபா 48,000 5. ரூபா 24,000 ரூபா 34,000

16. திரவ விகிதமும் நடைமுறை விகிதமும் முறையே
    1. 1: 1, 1.84:1 2. 1.24:1, 1.32 : 1 3. 0.48:1, 1.84:1
    4. 1.36:1, 1.84:1 5. 0.48:1, 1.68:1

17. இணைப்பு விகித கணிப்பீட்டில் தாழ் இணைப்பு குறிப்பிடப்படும் கருத்து
    1. உரிமை மூலதனம் கூடுதலாகவும் கடன் மூலதனம் குறைவாகவும் காணப்படும்.
    2. உரிமை மூலதனமும் கடன் மூலதனமும் கூடுதலாகக் காணப்படுதல்.
    3. உரிமை மூலதனம் குறைவாகவும் கடன் மூலதனம் கூடுதலாகவும் காணப்படுதல்.
    4. உரிமை மூலதனம், கடன் மூலதனம், இரண்டும் குறைவாகக் காணப்படுதல்.
    5. உரிமை மூலதனம் கடன் மூலதனம் இரண்டும் சமமாகக் காணப்படுதல்.

18. பின்வரும் சமன்பாடுகளில் எச்சமன்பாடு ஈடுபடுத்திய முதல் மீதான வருவாய் வீதம் (R.O.C.E) தேறிய இலாபம் (N.P.M) சொத்துப் புரள்வு வீதம் (A.T) இடையேயான தொடர்பினை சரியாக வெளிப்படுத்துவது.

1. R.O.C.E = N.P.M – A .T
2. R.O.C.E = N.P.M + A.T
3. R.O.C.E = N.P.M.X.A.T
4. $R.O.C.E = \frac{N.P.M}{A.T}$
5. $R.O.C.E = \frac{A.T}{N.P.M}$

19. கடன்பட்டோரில் ஒருவன் தனது கடன் மீதியினை காசாக தரும்போது கம்பனியின் நடைமுறை விகிதம் விரைவு விகிதம் ஆகியவைகளில் ஏற்படும் தாக்கம் என்ன?

	நடைமுறைவிகிதம்	விரைவு விகிதம்
1.	குறையும்	குறையும்
2.	மாற்றமில்லை	அதிகரிக்கும்
3.	அதிகரிக்கும்	மாற்றமில்லை
4.	மாற்றமில்லை	மாற்றமில்லை
5.	மாற்றமில்லை	குறையும்

20. சொத்தொன்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு வாழ்க்கைக் காலத்தை மீள்மதிப்பீடு செய்வதனால் அச்சொத்தின் வருடாந்தப் பெறுமானத் தேய்வில் ஏற்படும் வேறுபாடு நிதிக்கூற்றுகளில் எவ்வாறு பதியப்படும்.

1. கணக்கீட்டு மதிப்பீட்டின் மாற்றமொன்றாக கருதி நிறுத்திவைத்த வருவாய்களின் மீதி மீள்குறிப்பிடப்படும்.
2. கணக்கீட்டு வழு கருதி நிறுத்திவைத்த வருவாய்களின் மீதி மீள்குறிப்பிடப்படும்.
3. கணக்கீட்டுக் கொள்கை மாற்றமொன்றாக கருதி நிறுத்தி வைத்த வருவாய்களின் மீதி மீள்குறிப்பிடப்படும்.
4. கணக்கீட்டு மதிப்பீட்டின் மாற்றமொன்றாக கருதி நடைமுறை மற்றும் எதிர்காலங்களுக்கான இலாபம் அல்லது நட்டத்தில் சீராக்கம் செய்யப்படும்.
5. கணக்கீட்டுக் கொள்கை மாற்றமொன்றாக கருதி நடைமுறை மற்றும் எதிர்காலங்களுக்கான இலாபம் அல்லது நட்டத்தில் சீராக்கம் செய்யப்படும்.

21. கம்பனி ஒன்று 31.03.2011 இல் ரூபா 1300,000க்கு நிலம் ஒன்றை கொள்வனவு செய்தது. இந்த நிலமானது 2012.03.31இல் மீள் மதிப்புச் செய்யப்பட்டதனால் எழுந்த நட்டம் ரூபா 200,000 வருமானக் கூற்றில் வரவு வைக்கப்பட்டது. மீண்டும் இன்நிலமானது 2012.03.31 இல் மீள்மதிப்பிடப்பட்டதனால் ரூபா 300,000 மீள்மதிப்பு மிகை ஒதுக்கமாக சரியாகப் பதியப்பட்டது.

2011.03.31 லும் 2012.03.31லும் மீள்மதிப்பிடப்பட்ட பெறுமதிகள் முறையே.

1. ரூபா 1100,000, ரூபா1300,000 ம்
2. ரூபா 1500,000, ரூபா 1800,000
3. ரூபா 1100,000 ரூபா 1600,000 ம்
4. ரூபா 200,000 ரூபா 300,000
5. ரூபா 200,000 ரூபா 500,000

22. கம்பனி ஒன்றின் பங்கு வழங்கல் தொடர்பான தகவல் கீழ்வருமாறு

விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை	3000,000
பங்கு ஒன்றின் வழங்கல்விலை	ரூபா 10
பங்குகள் ஒதுக்கப்பட்ட விகிதம்	3:2 (மிகைமனுக்கட்டணம் மீளளிக்கப்பட்டது)
பங்கு வழங்கற் செலவுகள்	ரூபா 150,000

இப்பங்கு வழங்கலால் கம்பனியின் தேறிய சொத்தில் ஏற்படுத்திய விளைவு?

1. ரூ. 20 மில்லியன்
2. ரூ. 18.5 மில்லியன்
3. ரூ. 30 மில்லியன்
4. ரூ. 20.15 மில்லியன்
5. ரூ. 30.15 மில்லியன்

23. பின்வரும் கூற்றுகளில் சரியானது சரியானவை?

A. கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமானது நடைமுறை மற்றும் எதிர்காலங்களுக்கான இலாபம் நட்டங்களில் சீராக்கப்படும்.

B. கணக்கீட்டுக் கொள்கை மாற்றமானது நடைமுறை மற்றும் எதிர்காலங்களுக்கான இலாபம் நட்டங்களில் சீராக்கப்படும்.

C. கணக்கீட்டு வழுவானது நடைமுறை மற்றும் எதிர்காலங்களுக்கான இலாபம் நட்டங்களில் சீராக்கப்படும்.

D. கணக்கீட்டுக் கொள்கை மாற்றமானது நிறுத்திவைத்த வருவாய்களின் ஆரம்ப மீதியில் சீராக்கப்படும்

E. கணக்கீட்டு வழுவானது நிறுத்திவைத்த வருவாய்களின் ஆரம்ப மீதியில் சீராக்கப்படும் மீள்குறிப்பிடப்படும்.

1. A, B, C, D, E எல்லாம் 2. A, D, E மட்டும் 3. A, B, D, E மட்டும்
4. A, C, E மட்டும் 5. E மட்டும்

24. பெறுமானத் தேய்வு முறையினை மாற்றுதல்
1. கணக்கீட்டுக் கொள்கை மாற்றமாகும்
2. கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாகும்
3. இது ஒரு முன்னைய கால வழுவாகும்
4. இது ஒரு ஏற்பாடாக பொறுப்பாக இனங்காணப்படும்
5. இது நிதிக்கூற்றுக் காலப்பகுதிக்கு பிந்திய நிகழ்வாகும்.

25. எண்ணக்கரு நியமச்சட்டகத்தினை விருத்திசெய்ய வேண்டிய காரணங்கள் பின்வருவனவற்றுள் எதுவாகும்?

A. பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் இல்லாத நிலையில் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

B. நிதித்தகவல்களின் தரத்தினை உயர்த்துவதற்கான கோட்பாட்டு அடிப்படையினை வழங்குதல்.

C. நிதிக்கூற்றுகளைப் பயன்படுத்துவோர் அதனை சிறந்தமுறையில் விளங்கிக் கொள்ள உதவுதல்.

D. கணக்கீட்டு நியமங்களை விருத்தி செய்வதற்கான கோட்பாட்டு அடிப்படையினை வழங்குதல்.

1. A, B, C, D எல்லாம் 2. A, D மட்டும் 3. A, B, D மட்டும்
4. A, B, C மட்டும் 5. B, C மட்டும்

26. ஆடை உற்பத்திக் கம்பனி ஒன்றில் கிரய மூலங்கள் கீழே தரப்படுகின்றன.
A. துணைப்பொருட்களின் கிரயம்
B. தையல் இயந்திரங்களின் பெறுமானத் தேய்வு
C. துணிவகைக்கிரயம்
D. தரக்கட்டுப்பாட்டுக் கிரயம்
E. ஊழியர் மேலதிகக் கொடுப்பனவு
F. இயந்திர இயக்குனர் கூலிகள்

மேல் தரப்பட்ட கிரயங்களில் நேரக்கிரயம் நேரில் கிரயம் எனவகைப்படுத்துக.

	நேர்க்கிரயம்	நேரில்கிரயம்
1.	A, C	D, B, E, F
2.	A, D, C	B, E, F
3.	A, B	C, D, E, F
4.	D, B, C	A, E, F
5.	A, B, C, E	D, F

27. பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்றினை கூற்றுக்களினைத் தெரிவு செய்க
A. பங்குடமையின் எல்லாப் பொறுப்புக்களுக்கும் ஒவ்வோர் பங்காளரும் தனிப்பட்ட வகையில் பொறுப்புடையவர்கள்
B. பங்குடமையில் இருந்து பங்காளர் ஒருவர் எப்போதாவது இளைப்பாறுகையில் நன்மதிப்பானது புத்தகங்களில் பதிவு செய்யப்படல் வேண்டும்.
C. பங்காளர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்களும், மூலதனவட்டி என்பவற்றினால் பங்காளர் உரிமையில் அதிகரிப்பு ஏற்படும்.
D. பங்குடமை உடன்படிக்கையில் வேறு ஏதேனும் உடன்பாடுகள் இருந்தாலன்றி பங்குடமையின் இலாப நட்டங்கள் பங்காளரிடையே கட்டாயமாக சமனாகப் பகிரப்படல் வேண்டும்.
E. பங்குடமை ஒன்றின் பிரதான அம்சம் பங்குடமையின் பரஸ்பர உடன்படிக்கையே ஆகும்.

1. A, B, C மட்டும் சரியானது 2. B, C, E மட்டும் சரியானது
3. D மட்டும் சரியானது 4. A, B, C, D, E எல்லாம் சரியானவை
5. A, B, C, E மட்டும் சரியானவை

28. பின்வருவனவற்றுள் சரியான கூற்றுக்கள் எவை எனத் தெரிவு செய்து குறிப்பிடுக.
   A. நேர்க்கிரயங்கள் அனைத்தும் மாறும் கிரயங்கள் ஆகும்.
   B. சமப்பாட்டுப் புள்ளிக்கு மேல் உள்ள பங்களிப்பு இலாபத்திற்கு சமனாகும்.
   C. உற்பத்தி அதிகரிக்கும்போது அலகிற்கான நிலையான கிரயம் மாறாத பெறுமதியாகும்.
   D. சிக்கன கட்டளை இடல் தொகை 1,000 அலகுகளில் இருந்து கட்டளைத்தொகை 600 அலகுகளாக குறைக்கும்போது இருப்புக்கான மொத்தக் கிரயம் குறையும்.

   1. A மட்டும் 2. B மட்டும் 3. A, C மட்டும்
   4. A, D மட்டும் 5. B, D மட்டும்

29. பின்வரும் முதன்மை ஏடுகளில் இரு நோக்கங்களை நிறைவேற்றுகின்ற முதன்மை ஏடு என கருதப்படக்கூடியது எது?

   1. உட்திரும்பல் நாளேடு 2. கொள்வனவு நாளேடு 3. பொதுநாட்குறிப்பு
   4. விற்பனை நாளேடு 5. காசேடு

30. பின்வருவனவற்றுள் முதலீட்டு நடவடிக்கைகள் மூலமாக காசுப்பாய்ச்சல் என்பதனுள் எது உள்ளடங்கும்?

   1. செலுத்திய பங்குலாபம் 2. தொகுதிக்கடன் மீட்பு 3. செலுத்திய வருமானவரி
   4. கணணி விற்பனை 5. சாதாரண பங்குவழங்கல்

31- 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

31. 2010/2011 ஆண்டிற்கான வருமான வரி ஏற்பாடு ரூ. 42,000 ஆகும். இனங்காணப்பட்டு செலுத்தப்பட்ட வருமான வரி ரூ. 35,000 ஆகும். 2012.03.31இல் வருமானக்கூற்றிலும் ஐந்தொகையிலும் வெளிப்பட வருமான வரி 2011/2012ம் முறையே ரூ. 53,000 ரூ. 12,000 ஆகும். ஆண்டில் காசாக செலுத்தப்பட்ட வரி எவ்வளவு? ……………………………………….

32. கடன் கொள்வனவு ரூபா 480,000 வற்வரி 10 வீதம் கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப் பட்டுள்ளது. திருத்தப் பதிவினைத் தருக.

……………………………………………………………………………………………………….
……………………………………………………………………………………………………….

33. 2010.01.01 ஆரம்பிக்கப்பட்ட சங்கமொன்றின் சொத்து பொறுப்புக்கள்

உருப்படி	2010.12.31	2011.12.31	2012.12.31
மொத்த சொத்து	50,000	?	80,000
மொத்தப் பொறுப்புக்கள்	40,000	42,000	45,000
மிகைவருமானம்	?	18,000	?

2010.12.31 முடிவுற்ற ஆண்டுக்கான மிகை குறை வருமானம்? ……………………….
2012.12.31 முடிவுற்ற ஆண்டுக்கான மிகை குறை வருமானம்? ……………………….
2011.12.31ல் மொத்தச் சொத்து ……………………………….. 2012.12.31 ல் திரண்டநிதி

34. x கம்பனி y கம்பனியிடமிருந்து ரூபா 200 மில்லியன் நியாயமான பெறுமதி கொண்ட இயந்திரமொன்றினை 01.04.2010 இல் ரூபா 50 மில்லியன் வைப்புப் பணம் செலுத்தி குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டது. மிகுதி கடன் தொகை 4 வருடாந்த தவணைக் கட்டணத்தில் 50 மில்லியன் ரூபா படி செலுத்தப்படல் வேண்டும்.
31.03.2011 இல் தவணைக்கட்டணத்தில் உள்ளடக்கியுள்ள வட்டித்தொகை ரூபா 20 மில்லியனாகும்.
31.03.2012 இல் தவணைக் கட்டணத்தில் உள்ளடக்கியுள்ள வட்டித் தொகை ரூபா 15 மில்லியனாகவும் இருந்தது. இவ்வியந்திரம் நேர்கோட்டு முறையில் ஆண்டுக்கு 20% தேய்விடப்படும்.

1. 31.03.2011 இல் ஐந்தொகையில் இவ்வியந்திரத்தின் முன்கொண்டு செல்லும் பெறுமதி

2. x கம்பனியின் ஐந்தொகையில் இவ்வியந்திரம் சொத்தாக காட்டப்பட்ட அடிப்படையினை வழங்கும் எண்ணக்கரு

…………………………………………………………………………………………….

3.31.03.2011 இல் ஐந்தொகையில் y கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகை.

A. நடைமுறையில்லா பொறுப்பு ……………………………………………………………

B. நடைமுறை பொறுப்பு ……………………………………………………………

35. இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன்படி ஏற்பாடொன்று பொறுப்பொன்றாக நிதி கூற்றுகளில் இனங்காணப்பட்டு சீராக்கப்பட்ட அவசியமான நிபந்தனைகள் பற்றிய கூற்றுகளாகும். இவற்றுள் சரியானவை சரி எனவும் பிழையானவை பிழை எனவும் அடையாளமிடுக.

1. கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறாக நிகழ்காலத்தில் கடப்பாடு உருவாதல் ( )
2. கடப்பாட்டின் நிவர்த்தி செய்வதற்கான பொருளாதார அனுகூலங்களுடன் கூடிய வளம் வெளிச் செல்லும் நிகழ்தகவு உருவாதல் ( )
3. அக்கடப்பாட்டின் பெறுமானம் நம்பகத்தன்மை கொண்டதாக மதிப்பீடு செய்யக்கூடியதாக இருத்தல். ( )

36. வரையறுக்கப்பட்ட மதன் பொதுக்கம்பனி 2013.03.31, 2012.03.31 இல் நிதிநிலமை கூற்றிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பொறி இயந்திரம் தொடர்பான தகவல்கள் கீழ்தரப்படுகின்றன.

	2013.03.31	2012.03.31
பொறி இயந்திரம் கிரயம்	1500	1000
திரண்ட தேய்மான ஏற்பாடு	500	400

கம்பனியானது ரூபா 300,000 கிரயமானது இயந்திரமொன்றை 2013.03.31 இல் ரூபா 160,000 க்கு விற்பனை செய்தது. இத்திகதியில் கீழ்கொண்டுவந்த பெறுமதி ரூபா 200,000 ஆகும். இத்தினத்தில் புதிய இயந்திரமொன்று காசுக்கு வழங்கப்பட்டது.

2013.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான முதலீட்டு நடவடிக்கையிலான காசு உட்பாய்ச்சல் ரூபா ………………………

2013.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான முதலீட்டு நடவடிக்கையிலான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா ………………..

காசு அல்லாத விடயம் பெறுமதியுடன் குறிப்பிடுக.

37. வரையறுத்த உசேல் பொதுக்கம்பனி தற்போது பயன்பாட்டில் உள்ள இயந்திரத்திற்குப் பதிலாக புதிய இயந்திரத்தை அறிமுகப்படுத்தினால் காசு செயற்பாட்டுச் செலவு ரூபா 400,000 இலிருந்து ரூபா 320,000 வரை குறைவாகும் என்றும் பெறுமானத் தேய்வு ரூபா 90,000 இலிருந்து 120,000 வரை அதிகரிக்கும் என்றும் விற்பனை வருமானம் ரூபா 600,000 இலிருந்து ரூபா 640,000 வரை அதிகரிக்கும் என்றும் கூறுகின்றது.
புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 620,000 ஏற்படும் பழைய இயந்திர விற்பனையால் ரூபா 50,000 பெறப்படும். பழைய இயந்திரத்தின் புத்தக விலைப் பெறுமதி ரூபா 110,000 ஆகும்.
தேறிய காசுப்பாய்ச்சலைக் குறிப்பிடுக.

……

38. வாடிக்கையாளர் ஒருவரின் காசோலை ரூபா 12,000 வங்கியால் மறுக்கப்பட்ட போது காசேட்டிலிருந்து பேரேட்டிற்கு மாற்றப்படும் போது பொதுப் பேரேட்டில் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் ரூபா 10,200 எனவும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவில் ரூபா 1,200 எனவும் பதியப்பட்டிருந்தது.
மேற்குறிப்பிட்ட தவறினைத் திருத்துவதற்குரிய நாட்குறிப்புப் பதிவைத் தருக.

……
……
……
…………………………………………………………………………

39. வணிகமொன்றில் தட்டச்சு இயந்திரம் பழுதுபார்த்தல் செலவு ரூபா 8,000 இயந்திரக் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது. இவ்வழுவின் காரணமாக கீழே தரப்பட்ட உருப்படிகள் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்.

1. தேறிய சொத்து ……………………………………………………………………………..
2. தொழிற்படு மூலதனம் ……………………………………………………………………..
3. தேறிய இலாபம் ……………………………………………………………………………...
4. நடைமுறையல்லாச் சொத்து ………………………………………………………………

40. சுதனும் கரனும் மதுவும் முறையே இலாபநட்டங்களினை 3:2:1 எனப்பகிரும் பங்காளர்கள் 31.12.2010 இல் மது பங்குடமையில் இருந்து இழைப்பாறினார். மதிப்பிடப்பட்ட நன்மதிப்பு மூலதனக்கணக்கில் சீராக்கப்பட்டதுடன் சுதன் மூலதனக்கணக்கு மீதி மாற்றமடையவில்லை. கரன் மூலதனக் கணக்கு ரூபா 30,000இல் குறைவடைந்தது.

1. மதிப்பிடப்பட்ட நன்மதிப்பின் மொத்தப் பெறுமதி? ………………………………………

2. புதிய இலாப நட்டம் பகிரும் விகிதம்? ……………………………………….

41. இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இற்கமைவாக கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றம் செய்யக் கூடிய இவ்விரண்டு சந்தர்ப்பங்களைத் தருக.

1. ………………………………………………………………………………………

2. ………………………………………………………………………………………

42. பாலேஸ் கம்பனியில் 2012 ஆம் ஆண்டிற்கான இருப்பு சுழற்சிக்காலம் 20 நாட்கள் ஆகவும் சராசரி இருப்பு ரூபா 30,000 ஆகவும் காணப்பட்டது. (வருடநாட்கள் 360)

இருப்பு புரள்வு விகிதத்தினைக் கணிப்பிடுக ……………………………………………..

விற்பனைக் கிரயத்தினைக் கணிப்பிடுக …………………………………………………

43. குறித்த நிறுவனம் ஒன்றில் எடுக்கப்பட்ட களஞ்சிய தகவல்கள்

கட்டளை இடும் தொகை 800 அலகுகள் அலகு ஒன்றுக்கான வருடாந்த இருப்பு பேணுதல் கிரயம் ரூ. 2 ஆகும். ஆண்டிற்கான கட்டளைகள் எண்ணிக்கை 40 ஆகும். எனில்

அ) இருப்புக்கான மொத்த கிரயத்தினைக் கணிப்பிடுக ……………………………..

ஆ) ஒரு கட்டளைக்கான கிரயத்தினைக் கணிப்பிடுக ………………………………

இ) வருடாந்த கேள்வி (வருடாந்த பாவனை) ………………………………………

44. உற்பத்தி நிறுவனமொன்றுடன் 2012.12.31 இல் முடிவுற்ற ஆண்டுடன் தொடர்பான பின்வரும் தகவலை பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

உற்பத்திக்குத் தயாராக இருந்த மூலப்பொருட்களின் கிரயம்	ரூபா 20,000
நேர் ஊழிய கிரயம்	ரூபா 30,000
உற்பத்திக்கிரயம்	ரூபா 100,000
விற்பனை விநியோக மேந்தலைக் கிரயம்	ரூபா 23,000

இவ்வாண்டில் ஆரம்ப மூலப்பொருளிருப்பிலும் இறுதி மூலப்பொருள் இருப்பானது ரூபா 3,000 குறைவாக உள்ளது. இவ்வாண்டில் சராசரி மூலப்பொருளிருப்பு ரூபா 4,000 ஆக இருந்தது. முடிவுப்பொருளிருப்பில் இவ்வாண்டு ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 2,000

1. உற்பத்தி மேந்தலைக் கிரயம் ………………………………………………………

2. கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம் ………………………………..

3. பயன்படுத்திய மூலப்பொருட்களின் கிரயம் ………………………………………..

4. மூலக்கிரயம் ………………………………………………………………………

45. உற்பத்தி நிறுவனமொன்றில் 2 உற்பத்தி திணைக்களமும் ஒரு சேவைத் திணைக்களமும் காணப்பட்டது. சேவைத்திணைக்கள மேந்தலை உற்பத்தித் திணைக்களம் R.S இற்கிடையே 3:2 என்றவாறு மீள் பகிர்வு செய்யப்பட்டது. மீள் பகிர்வு செய்யப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட உறிஞ்சல் வீதம்

திணைக்களம்	உறிஞ்சல் வீதம் ஊழிய மணித்தியாலபடி ரூபா	உண்மையாக ஏற்பட்ட ஊழிய மணித்தியாலம்	பாதிக்கப்பட்ட ஊழிய மணித்தியாலம்
R	12	6,000	5,000
S	15	3,000	2,000

உறிஞ்சல் வீதம் கணிக்கப்பட்ட பின்னர் பின்வரும் தவறு கண்டுபிடிக்கப்பட்டது.

களஞ்சிய திணைக்களத்தின் மேந்தலை ரூபா 20,000 ஆல் குறைத்து கூட்டப்பட்டு இருந்தது. கண்டுபிடிக்கப்பட்டு இருந்தது. தவறு திருத்திய பின்னர்

1. R திணைக்களத்தின் பாதிக்கப்பட்ட மேந்தலை யாது? ……………………………..

2. S திணைக்களத்தில் பாதிக்கப்பட்ட மேந்தலை யாது? …………………………...

46. அ) இருப்புக்களை கொள்வனவு செய்வதற்காக களஞ்சியப் பகுதியால் கொள்வனவுப் பகுதிக்கு அனுப்பப்படும் வேண்டுகோள் பத்திரத்தில் உள்ளடக்கப்படும் நான்கு உருப்படிகளைத் தருக?

1. …………………………….. 2. ……………………………….

3. ……………………………. 4. ……………………………….

ஆ) மூலப்பொருள் பெறுவனவு வழங்கல் அல்லது உள்ளக மாற்றம் தொடர்பாக பேணப்படும் இரண்டு பதிவேடுகளைத் தருக.

1. …………………………….. 2. ……………………………….

3. ……………………………. 4. ……………………………….

47. உற்பத்தி நிறுவனமொன்றில் நேரடி ஊழிய மணித்தியால அடிப்படையில் மேந்தலை உறிஞ்சப்படுகின்றது. வேலை நடைபெற்ற உண்மையான நேரடி ஊழிய மணித்தியாலயம் 2,000 உறிஞ்சப்பட்ட மேந்தலை ரூபா 54,000 உள்ளடக்கப்பட்ட மேந்தலை குறைவு ரூபா 12,000 உறிஞ்சல் வீதத்தினை கணிப்பிடுக.

48. H Ltd ன் மதிப்பீட்டுத் தகவல்கள் பின்வருமாறு

விபரம்	2012 ரூ.	2013 ரூ.
விற்பனை	45,000	50,000
மொத்தக்கிரயம்	40,000	43,000
இலாபம்	5,000	7,000

1. கம்பனியின் இலாப கனவளவு விதம்? …………………………………………………
2. பங்களிப்பு பெறுமதி? …………………………………………………………...
3. நிலையான கிரயம்? …………………………………………………………….
4. இலாபநட்டமற்ற புள்ளியில் விற்பனைப் பெறுமதி? ……………………………………..

49. இலாபநட்டமற்ற புள்ளி பகுப்பாய்வின் எடுகோள்களில் சரியானவை

1. எல்லாச் செலவும் நிலையானது மாறும் செலவு என வகைப்படுத்தக் கூடியது. பல்வேறு செயற்பாட்டு மட்டங்களில் மொத்த நிலையான சொத்து மாற்றம் இன்றி இருக்கும். மொத்த மாறும் செலவு இது போன்றது அல்ல.
2. விற்பனை விலை அலகுக்கானது மாற்றம் இன்றி இருக்கும்.
3. தொழிநுட்பம் உற்பத்திமுறை செயற்திறன் என்பன மாற்றமடையாமல் உள்ளது.
4. இருப்பு இருக்க மாட்டாது அல்லது எல்லைச்செலவில் இருப்பு மதிப்பிடப்படும்.

50. கீழ்வரும் கூற்றுகள் சரியா பிழையா குறிப்பிடுக.

1. கழிவு வீதம் அதிகரிக்கும் போது முதலீட்டின் தேறிய நிகழ்காலப் பெறுமதி குறையும்.
2. கழிவு வீதம் குறையும் போது முதலீட்டின் தேறிய நிகழ்காலப் பெறுமதி அதிகரிக்கும்
3. ஆரம்ப முதலீடு குறையும் போது தேறிய நிகழ்காலப் பெறுமதி அதிகரிக்கும்
4. முதலீட்டின் எஞ்சிய பெறுமதி குறையும் போது தேறிய நிகழ்காலப் பெறுமதி.

The National e-learning Portal for General Education

கணக்கீடு	வினாத்தாள் I	விடைகள்
1 - 2	11 - 3	21 - 3
2 - 1	12 - 3	22 - 2
3 - 3	13 - 4	23 - 2
4 - 3	14 - 3	24 - 2
5 - 5	15 - 5	25 - 1
6 - 4	16 - 1	26 - 3
7 - 3	17 - 1	27 - 3
8 - 4	18 - 3	28 - 2
9 - 3	19 - 4	29 - -
10 - 5	20 - 4	30 - -

31. 83,000ரூபா

32. VAT கணக்கு வரவு 48,000
    கொள்வனவுக் கணக்கு செலவு 48,000

33. அ. ரூ 10,000
    ஆ. ரூ 7,000
    இ. ரூ 60,000
    ஈ. ரூ 35,000

34. 1. 150 மில்லியன்
    2. சட்டமுறை எண்ணக்கரு
    3. A) 35 மில்லியன்
       B) 85 மில்லியன்

35. 1. சரி
    2. சரி
    3. சரி

36. 1. ரூ 160,000
    2. ரூ 800,000
    3. பெறுமானத்தேய்வு 100,000

37. வெளிப்பாய்ச்சல் ரூ 570,000
    காசு உட்பாச்சல் ரூ 120,000

38. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு 13,200
    கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு 10,200
    தொங்கல் கணக்கு செலவு 3,000

39. 1. 9000 ரூபாவால் அதிகரிக்கும்.
    2. மாற்றமில்லை
    3. ரூ 9000 ஆல் அதிகரிக்கும்
    4. ரூ 9000 ஆல் அதிகரிக்கும்

40. 1. 180,000 ரூபா
    2. சமம்

41. 1. பிந்திக் கிடைத்த தகவல் காரணமாக
    2. தற்போதைய நிலைமையினை மீள மதிப்பிடல்

42. 1. 18 தடவை
    2. 540,000 ரூபா

43. அ. ரூ1600
    ஆ. ரூ 20

The National e-learning Portal for The General Education

இ. 32,000 அலகுகள்

44. 1. ரூ 47,000
2. ரூ 14,500
3. ரூ 23,000
4. ரூ 53,000

45. 1. ரூ 72,000
2. ரூ 38,000

46. அ) 1. தேவையான பொருள் பற்றிய விபரம்
2. தொழிநுட்ப விபரம்
3. தேவையான அளவு, தினம், காலம்
4. வாடிக்கையாளர் கட்டளை இலக்கம்

ஆ) 1. BID Card
2. களஞ்சியப் பேரேடு

47. 1. ரூ 27
2. 2,500 மணித்தியாலம்

48. 1. 40%
2. 18,000 ரூபா OR 20,000 ரூபா
3. ரூ 13,000
4. ரூ 32,500

49. 1. சரி
2. சரி
3. சரி
4. சரி

50. 1. சரி
2. சரி
3. சரி
4. பிழை

The National e-learning Portal for The General Education